**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 708/2023</u>**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம்19–ம் நாள் புதன்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பொன்ராஜ் | தொழில் |
| த/பெ | முருகசாமிகவுண்டர் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எங்கள் தாத்தாவுக்கு மொத்தம் பதினொரு ஏக்கர் 10 சென்ட் நிலம் இருந்தது என்று சொன்னால் சரிதான். அவருக்கு என்னுடைய தகப்பனாரும் வாதியின் தகப்பனாரும் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். வாதியின் தகப்பனார் என்னுடைய தாத்தா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய தாத்தா இறந்ததற்கு பிறகு என்னுடைய தகப்பனாரும் வாதியின் சகோததரரும் வா.சா.ஆ.2 ன் படி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகக்காரரர் ஆவணத்தில் நல்லத்தாள் கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியவில்லை.மேற்படி பாகப்பிரிவனையின் அடிப்படையில் எனக்கு 5.5 ஏக்கர் நிலமும் வாதியின் சகோதரருக்கு 5.5 ஏக்கர் நிலமும் பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். வாதியின் சகோதரர் இறந்து தற்போது 15 ஆண்டுகள் இருக்கும் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினைக்கு பிறகு எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை என்னுடைய தகப்பனாரும் நாச்சிமுத்துக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அவரும் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. நாச்சிமுத்துவுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் குறித்து மட்டும் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் குறித்து வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு செய்யப்பட்ட பாகப்பிரிவினை செல்லாது என இந்த வழக்கில் பரிகாரம் கூறப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 இரண்டு பாகக்கரார் செல்லக்கூடியதாகும். மேற்படி பாகக்கரார் குறித்து எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் பூமியில் பாகப்பிராலுக்கு பிறகு நாங்கள் வீடு கட்டி தென்னை மரம்வைத்துள்ளோம் என்றால் சரிதான். நாச்சிமுத்துக்கு ஒதுக்கப்பட்டு நிலத்தில் பாகக்கராருக்கு பிறகு அவர் கிணறு வெட்டி மின் இணைப்பு பெற்று தென்னை மரம் வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எங்களது இரண்டு பாகங்களும் தென்னந்தோப்புகள் என்றால் சரிதான். என்னுடைய அத்தை தயார் செய்து வைத்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கையெழுத்து மட்டும் போட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தன்னுடைய சகோதரரிடம் பங்கு கேட்டதாகவும் அதற்கு அவர் தருவதாக சொன்னதாகவும் அவர் இறப்பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பே வாதி என்னிடம் குறிப்பிட்டார்.

3. என்னுடைய அப்பாவும் அவர் சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் வாதிக்கு அப்போதே தெரியும் என்று சொன்னால் சரிதான். வருவாயை பிரித்துக் கொண்ட விபரமும் செலவுக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்று விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்க வேண்டும் என்பதற்காக முதல் விசாரணை வாக்குமூலத்தில் பொய்யான விபரங்களை குறிப்பிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு பாகம் கிடைத்தால் அதை எனக்கு தருவதாக சொன்னதன் அடிப்படையில் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 1-ம் பதிவாதிக்கும் இருக்கும் வேறு மனவருத்தங்களை மனதில் வைத்துக்கொண்டு அவருக்கு

எதிராக நான் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.19 18:34:47 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.